# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## CRS 4103 Sociology of Religion

நேரம் : 03 மணித்தியாலங்கள்9

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

01.(அ) சமயத்தை அறிய சமூகவியல் ஆய்வாளர்கள் பயன்படுத்திய ஆய்வு முறைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவற்றுள் எவையேனும் மூன்றினைச் சுருக்கமாக அறிமுகம் செய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) "அ" பகுதியில் தங்களால் அறிமுகம் செய்யப்பட்ட ஆய்வு முறைகளுள் ஏதாவது ஒன்றினைத் தெரிந்து அது சமயம் குறித்த ஆய்வில் ஏற்படுத்தும் சாதக பாதகங்களைச் சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

02.(அ) "சமயமானது சமூகத்தில் தொழிற்பாடுடையதாக இருக்க வேண்டும்" என்ற கருத்தினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) சமூகத்தின் மீதான சமயத்தின் தொழிற்பாடுகளில் எவையேனும் ஒன்று பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

03.(அ) மந்திரம் என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) சமயத்திற்கும் மந்திரத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை கீத் ஏ.ரொபேர்ட் அவர்களின் பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(20 புள்ளிகள்)

04.(அ) புனைவு (myth) சடங்கு (Ritual) என்பவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) புனைவு, சடங்கு ஆகியவற்றைச் சமயமாகக் கொள்வதில் உள்ள பிரச்சினைகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

05.(அ) புனிதம், புனிதமல்லாதவை குறித்து எமில் துர்க்கைம் கூறும் கருத்துக்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "புனிதம் குறித்த அனுபவம் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டதாகும்" ஆராய்க.

(15 புள்ளிகள்)

06. "சமயச் சார்பற்ற தன்மை சமூகத்தில் சமயத்தைக் குறைக்கின்றது" என்ற கருத்தை பீற்றர்வேகர், பார்சன், றோபட்வெலா என்பவர்களது கருத்துக்களோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(25 புள்ளிகள்)